# CEYLINCO GENERAL INSURANCE LIMITED PB 5184

**Miscellaneous Department**
3rd Floor, " Ceylinco House", 69, Janadhipathi Mawatha, Colombo 1, Sri Lanka.
Tel: +94 11 2485719 (Direct), +94 11 4702702 (General) Fax: +94 11 4702719
E mail: ciccoms@ceyins.lk



CEYLINCO VIP ON THE SPOT ලෝකෙටම එකයි!


## தனிப்பட்ட விபத்துக் காப்புறுதிப்பத்திரம

CO0116AP00005463

இங்குள்ள அட்டவணையில் காப்புறுதி செய்தவர் எனப் பெயர் குறிப்பிடப்பட்டவர் இந்த ஒப்பந்தத்திற்கு அடிப்படையாக அமைகின்றதும் இத்துடன் இணைந்ததாக கருதப்படுகின்றதுமான முன்மொழிவொன்றின் மூலமும் வெளிப்பாடென்றின் மூலமும் செலிங்கோ இன்சூரன்ஸ் கொம்பனி லிமிடற் இற்கு (இதன் பின்னர் கொம்பனி எனப்படும்) விண்ணப்பித்து, மற்றும் இதன் பின்னர் அடங்கும் காப்புறுதி தொடர்பாக மேற்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட காப்புறுதி தொடர்பாகக் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் அல்லது செலுத்த ஒப்புக் கொண்டுள்ளார்.

காப்புறுதி செய்து கொண்டுள்ள காலகட்டத்தினுள் காப்புறுதி செய்தவர் விபத்துக்களினால் ஏற்பட்ட யாதாயினும் உடல் ரீதியான காயங்களினால் பாதிக்கப்படுவாராயின் அந்தக்காயங்கள் அவரது மரணத்திற்கு அல்லது அவரை முழுமையாக முடமாக்குவதற்கு அல்லது இதன் பின்னர் விவரிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுகின்ற மருத்துவ மற்றும் இதன் பின்னர் விவரிக்கப்படுகின்ற சத்திரசிகிச்சைகளை பெறுவதற்கான வேறு யாதாயினும் காரணங்கள் அல்லாத தனியொரு காரணமாக அமையுமாயின், கொம்பனியானது இதன் காப்புறுதிப் பத்திரத்தின் அட்டவணையில் தரப்பட்டுள்ள பின்வரும் வரையறைகள், விலக்கல்கள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிற்குறிப்புக்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப காப்புறுதி செய்தவருக்கு அல்லது அவரது மரணத்தின் போது அவரது சட்டரீதியான தனிப்பட்ட பிரதிநிதிக்கு இந்த அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பணத் தொகையை அல்லது தொகைகளை வழங்கும் என இப்போது இந்தக் காப்புறுதிப் பத்திரம் சான்று பகர்கின்றது.

இதற்குச் சாட்சியாக இந்த காப்பீட்டுப் பத்திரத்தில் செலிங்கோ இன்சூரன்ஸ் கொம்பனி லிமிடற் சார்பாக கொழும்பு......இல் ..2017வருடம் ....04....மாதம்.30....திகதியாகிய இத்தினத்தில் ஒப்பமிடப்படுகின்றது.

Ceylinco General Insurance Limited

செலிங்கோ இன்சூரன்ஸ் கொம்பனி லிமிடற்

சார்பாக அதிகாரம் பெற்றவரின் ஒப்பம்


Directors

* B.S.M. De Silva - Chairman * H.D.K.P. Alwis F.C.I.C. - Managing Director * Dr. W.C.J. Alwis * U. Witharana - A.C.A., M.B.A., F.C.M.A. - Deputy Managing Director
* N.D. Nugawela F.C.I.C. * R. A. Gunathilake * K.D.A.S.R. Arsakularatne - B.Com.(Hons.) * E.M.M. Boyagoda - M.B.A. * Dr. U.D. De Silva - MBBS., FD., FOMT., FAAD.
* A.R.H.Fernando *S.C.G.Guruge * M.D.E.A.G.Saparamadu-MPSc. *Dr.S.D.Wanigaratne-D.Clin.Psych.,FBPsS. *C.P.A.Wijeyesekera *G.S.Sundararajan B.Eng.(Agri.)

## வீஷேட ஏற்பாடுகள்

1. **காணாமற் போதல்ஹ**

காப்புறுதி செய்தவர் தொடர்ச்சியாக 12 மாதங்கள் காணாமற் போவாராயின் கொம்பனியானது இந்தக் காப்புறுதியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட யாதாயினும் விபத்தினால் மரணம் சம்பவித்ததென முடிவுக்கு வருவதற்கு எற்றவாறாக சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினும் சான்றுகளை பரிசோதித்திருக்குமாயின், மேற்பட்ட நட்டஈட்டுக் கோரிக்கைக்கு கொடுப்பனவு வழங்கிய பின்னர் எப்போதாவது ஒரு சமயத்தில், காப்புறுதி செய்தவர் உயிர் வாழ்கின்றார் என அறியப்படுமாயின், முழுத்தொகையையும் கொம்பனிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

2. **திறந்த நிலை**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் மூலம் காப்பீடு செய்யப்பட்ட விபத்தொன்றின் விளைவாக, காப்புறுதி செய்தவர் யாதாயினும் இயற்கையான மூலமொன்றுக்கு காட்சிப்படுத்தப்படுவாராயின், மேற்படி திறந்த நிலை காரணமாக காப்புறுதித் திட்டத்தில் விவரிக்கப்பட்ட யாதேனும் நட்டத்திற்கு முகங்கொடுக்க நேரிடுமாயின், மேற்படி விஷேட நட்டம் காப்புறுதிப்பத்திரத்தின் இந்த நிபந்தனையின்படி காப்பீடு செய்யப்பட்டிருக்கும்.

## தவிர்க்கப்பட்டவைகள்

பின்வருவனவற்றின் நேரடி அல்லது மறைமுக விளைவினால் ஏற்பட்டவை தொடர்பான நட்டஈட்டுக் கோரிக்கைகளுக்கு கொம்பனியானது பொறுப்புடமையாகாது.

1. காப்புறுதி செய்தவர் பின்வருவனவற்றிற்கு பங்களிப்பாராயின் அல்லது ஈடுபடுவாராயின்ஹ

a. ஆயுதப்படை, கடல் அல்லது விமானப்படை சேவையில் அல்லது நடவடிக்கையில்

b. பனிச் சறுக்கு விளையாட்டு தவிர்ந்த ஏனைய குளிர்கால விளையாட்டுக்கள், தொழிர் சார் விளையாட்டுக்கள்

c. குன்றுகளில் ஏறுதல் வழிகாட்டல்கள் அல்லது கயிறுகள் தேவைப்படும் மலை ஏறதல

குழிகளைக்கண்டறிதல், தொங்கி வழுக்குதல், உயரத்திலிருந்து பாய்தல், பரசூட்டிலிருந்து குதித்தல், காலினால் தவிர்ந்த வேறு வகையான ஒட்டப் போட்டிகள்

d. பூரண அனுமதிப்பத்திரம் பெற்ற ஒரு அங்கீகரிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து நிறுவனமொன்றின் ஒரு விமானத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சார்டர்ட் விமான நிறுவனமொன்றிற்குச் சொந்தமானதும் வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் பெற்ற விமானியினால் செலுத்தப்படுகின்றதுமான விமானத்தில் பயணியாக (இங்கு பயணி என்ற சொல்லில் விமான ஊழியர்கள் எவரையுமோ விமானத்தில் சேவையாற்றும் தொழினுட்பவியலாளர்கள் எவரையுமோ குறிக்க மாட்டாது) அல்லாது பறத்தல் அல்லது வேறு வான்வெளிச் செயற்பாடுகளில் ஈடுபடல்

e. குற்றச் செயல்கள் அல்லது யாதாயினும் சட்ட விரோத செயற்பாடுகள்

2. காப்புறுதி செய்தவர் யாதாயினும் ஒரு போதை மருந்திற்கு அடிமையாகி இருத்தல் குறித்த போதை மருந்து சட்டரீதியாக தகமைபெற்ற மருத்துவர் ஒருவரினால் விதந்துரைக்கப்பட்டிருத்தல், அதாவது குறித்த விதந்துரைத்தல் போதைப்பொருளுக்கு அடிமையாதலுக்கான மருத்துவ விதந்துரைத்தலாக இல்லாதிருத்தல்

3. ஆத்திரமூட்டப்பட்ட கொலை அல்லது தாக்குதல், வேண்டுமென்றே தனக்குத்தானே காயமேற்படுத்திக் கொள்ளல், சுயநினைவுடனேயோ சுயநினைவின்றியோ தற்கொலை அல்லது அதற்கான முயற்சி.

Ceylinco General Insurance Limited

4. கற்பிணியாகவிருத்தல், பிள்ளைப்பேறு, முள்ளரிருந்து நிலவும் உடல் உள ஊனம் அல்லது குறைபாடு

5. வேண்டுமென்றே ஆபத்தொன்றுக்கு முகங் கொடுத்தல் (மனிதனின் உயிரைக் காப்பாற்றும் முகமாக அன்றி)

6. மனித நீர்ப்பீடண குறைப்பாட்டு சாகசம் (ஃஜஐஏ) மற்றும் ∴ அல்லது யாதாயினும் ஃஜஐஏ தொடர்பிலான நோய்கள் யுஐனுளு (பெறப்பட்ட நீர்ப்பீடணக் குறைப்பாட்டுச் சகசம்) யுஐனுளு தொடர்பிலான சிக்கல்கள் (யுசுஊ) எவ்வாறு நடைபெற்ற போதிலும் அல்லது∴ மற்றும் யாதாயினும் விகாரங்களின் தொகுக்கப்பட்ட பல்வகைமை அல்லது பரிகாரம் இவை எவ்வாறு ஏற்றபோதிலும்

7. குழப்பம், அல்லது உள்நாட்டு கலவரங்கள், யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயற்பாடுகள், யுத்தங்கள் (அவை பிரகடணப்படுத்தப் பட்ட அல்லது பிரகடணப்படுத்தப்படாத ஒன்றாக இருப்பினும்) உள்நாட்டு யுத்தங்கள், கிளர்ச்சி, புரட்சி, அரசுக்கு எதிரான போராட்டங்கள், அல்லது இராணுவ அல்லது சட்டரீதியற்ற பதவி ஏற்றல்

8. (யாதாயினும் ஒரு நிறுவனம் சார்பாக, நபர் அல்லது நபர்கள் அல்லது நபர் குழுக்கள் சார்பாக) பதவி கவிழ்க்கப்பட்ட, கணிப்பீடப்பட்ட அல்லது வழிப்படுத்தப்பட்ட சட்டரீதியாக நிறுவப்பட்ட அரசாங்கத்தை அல்லது சட்டப்படி எவ்வாறாயினும் அல்லது யாதாயினும் மாகாண அல்லது பிராந்திய ரீதியில் செல்வாக்கிலுள்ள அதிகாரங்களை அச்சுறுத்தி அல்லது பயங்கரவாதத்தின் மூலம் அல்லது வன்செயலினால் ஆன யாதாயினும் ஒரு நடவடிக்கை

9. அயனாக்க கதிரியக்கம் அல்லது அணு எரிபொருளில் அல்லது அணு எரிபொருள் தகனத்தினால் உருவான அணுக்கரு கழிவிலிருந்து ஏற்பட்ட கதிரியக்கத்தின் தொற்று,
இங்கு குறிப்பிடப்பட்ட தவிர்க்கப்பட்டவற்றின் கீழ் அணுக்கதிர் வெடிப்புத் தொழிற்பாட்டின் யாதாயினும் சுயமாக இயங்கும் செயற்பாடுகளும் உள்ளங்கும்

Ceylinco General Insurance Limited

மரணம் அல்லது நிரந்தரமாக முடமாதலின்போது வழங்கும்

சலுகைகள் தொடா்பான அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. விபத்து மரணம் | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள காப்புறுதித் திட்டத்தின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு முதலீட்டுப் பணம் | |
| 2. நிரந்தர முடமாதல் | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள காப்புறுதித் திட்டத்தின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு முதலீட்டுப் தொகையின் வீதங்கள் | |
| முடமாதல் தொடா்பான விவரங்கள் | | மூலதனத்தின் வீதங்கள் |
| • கைகால்களை இழத்தல் | | 100% |
| • இரண்டு கைகளும், எல்லா விரல்களும் பெருவிரல்களும் இழக்கப்படல் | | |
| • முழுமையாக செயலற்றுப் போதல் | | |
| • முழுமையாகச் சுயபுத்தியை இழத்தல் | | |
| • நிரந்தரமாக படுக்கையில் வாழ்வதற்குக்கு காரணமாகும் காயங்கள் | | |
| • நிரந்தர முழுமையாக முடமாதற்குக் காரணமாகும் வேறு யாதாயினும் காயங்கள் | | |
| • கண்ணை இழத்தல் | முழுமையான கண்பார்வை | |
| • தோள் பட்டையளவில் கைகளை இழத்தல் | | 50% |
| • தோள் பட்டைக்கும் முழங்கைக்கும் இடையே கையை இழத்தல் | | |
| • முழங்கைக்கும் மணிக்கட்டுக்குமிடையே கையை இழத்தல் | | |
| • மணிக்கட்டில் கையை இழத்தல் | | |
| • கால்களை இழத்தல் | இடையில் இடைக்கும் முழங்காலுக்குமிடையில்<br>முழங்காலுக்குக் கீழாக | |
| • கண்ணை இழத்தல் | | |
| • நான்கு விரல்களையும் ஒரு கையின் பெருவிரலையும் இழத்தல் | | |
| • பேச்சாற்றல் இழக்கப்படும் போது | | |
| 3. விபத்து அற்றா மரணம் – இருதிக்கிகை இருதிக்கரிகைக்கான செலவுகள் | | Rs. 100,000.00 |

Ceylinco General Insurance Limited

• முழுமையானதும் நிரந்தரமானதுமான தொகுதியின் இழப்பீடு என்பதை தொகுதியின் இழப்பீடாகக் கருதப்படும். பேச்சு இழப்பு என்பதன் கருத்து முழுமையான நிரந்தரமான வாய்மூலமாக தொடர்பாட முடியாமையாகும்.

• ஒரு விபத்து தொடர்பாக செலுத்தக் கூடிய எல்லாக் கொடுப்பனவுகளினதும் மொத்தம் 100 % தைத் தாண்ட மாட்டாது. மொத்த 100 % மும் செலுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இதன் கீழ் குறிப்பிடப்படும் சகல காப்புறுதிகளும் முடிவுக்குக் கொண்டுவரப்படும். 100 % த்திலும் குறைவான ஏனைய எல்லாக் நட்டங்களும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் சலுகைகள் A யின் காப்பீட்டிலிருந்து விபத்து நடைபெற்ற திகதியிலிருந்து காப்புறுதிப்பத்திரம் முடிவடையும் வரை கழித்துக் கொள்ளப்படும்.

**நிபந்தனைகள்**காப்புறுதித்திட்டத்தையும் அதன் அட்டவணையையும் தனியொரு ஒரு ஒப்பந்தத்தின் ஆவணமாகக் கருதி வாசித்தல் வேண்டும். காப்புறுதிப்பத்திரத்தின் யாதாயினும் ஓரிடத்தில் ஒரு சொல் தொடர்பாக யாதாயினும் விஷேட வரைவிலக்கணம் காப்புறுதிப்பத்திரத்தில் அல்லது அட்டவணையில் தரப்பட்டிருக்குமாயின் அச்சொல் ஆவணத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து இடங்களிலும் அதே கருத்தையே கொண்டிருக்கும்.

1. **அறிவித்தல்**

கொம்பனிக்கு வழங்கும் ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது தொடர்பாடலும் எழுத்து மூலமாக எழுதி அனுப்பப்பட வேண்டும். காப்புறுதித்திட்டத்தின் யாதாயினும் மாற்றங்கள் அல்லது புறக்குறிப்புக்கள் செல்லுபடியாவது அது அதிகாரம் பெற்ற ஒருவரினால் ஒப்பமிடப்பட்டு அல்லது சிற்றொப்பமிடப்பட்டு உள்ளபோது மாத்திரமாகும்.

2. **உரிமைத்துவத்திற்கு முன்மாதிரியான நிபந்தனைகள்**

தக்க அவதானிப்புக்களும் காப்புறுதிதாரரினால் இந்த காப்புறுதிப்பத்திரத்தின் நியமங்களை, ஏற்பாடுகள் மற்றும், நிபந்தனைகளை நிறைவேற்றல் ஆகியன மற்றும் அவை தொடர்பான யாதொன்றையும் நிறைவேற்றல் அல்லது காப்புறுதிதாரர் அவற்றுக்கு இணங்குதல் ஆகியன இந்த கொம்பனியின் உரிமைத்துவம் தொடர்பான முன்மாதிரியான நிபந்தனைகளாகும்

3. **பிழையான பிரதிநிதித்துவம் / மோசடி**

யாதாயினும் ஒரு விடயம் தொடர்பான காப்புறுதி செய்தவரின் வெளிப்பாடு அல்லது முன்மொழிவு பிழையானதாக அல்லது நட்டவச்சத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் யாதாயினும் காரணிகள் பற்றி இங்கு தவறாகத் தரப்பட்டிருக்குமாயின் அல்லது இந்தக் காப்புறுதி பத்திரத்தில் தராது விடப்பட்டிருக்குமாயின் அல்லது தவறான வெளிபாட்டுடன் அல்லது தவறான பிரதிநிதித்துவத்துடன் புதுப்பித்தல் செய்யப்பட்டிருக்குமாயின், அல்லது குறைக்கப்பட்டிருக்குமாயின் அல்லது யாதாயினும் நட்டஈட்டுக் கோரிக்கை அல்லது வேறு யாதாயினும் விடயங்கள் மோசடியானதாக அல்லது அவற்றுக்குச் சான்றாகத் தரப்பட்ட அல்லது இந்த யாதாயினும் ஒரு விடயம் தொடர்பாக யாதாயினும் கூற்று அல்லது வெளிப்பாடு பொய்யானதாக இருக்குமாயின் இந்தக் காப்புறுதிப்பத்திரம் செயலிழக்கும்.

4. **நட்டவச்சத்தின் மாற்றம்**

காப்புறுதி செய்தவர் அவரது / அவளது தொழில், வியாபாரம், கடமைகள், பொழுது போக்கு தொடர்பாக ஏற்படும் யாதாயினும் மாற்றங்களின் போது உடனடியாக அது பற்றிய அறிவித்தலை கொம்பனிக்கு அளித்து அதற்குத் தேவையான மேலதிக காப்புறுதிக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

காப்புறுதிக்கட்டணத்தின் ஒவ்வொரு புதுப்பித்தலின் முன்னரும், காப்புறுதி செய்தவர் அவர் அறிந்த அல்லது பாதிக்கப்பட்ட யாதாயினும் காயங்கள், நோய்கள், உடல்ரீதியான பாதிப்புக்கள் அல்லது பலவீனங்கள் பற்றி கொம்பனிக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

5. **நட்டஈட்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை**

ஒரு விபத்து நிகழ்வின் போது இந்தக் காப்புறுதி பத்திரத்தின் கருத்தின்படி, அது தொடர்பான அறிவித்தல் கூடிய விரைவில் கொம்பனிக்கு அளித்தல் வேண்டும். விபத்து நடந்து 7 நாட்களினுள் அது பற்றிய அறிவித்தல் கொம்பனிக்குக் கிடைக்காவிட்டால், தாமதம் தொடர்பான நியாயமானதும் திருப்தியானதுமான விளக்கம் கொம்பனிக்கு அளித்தல் வேண்டும். அல்லது நட்டஈடானது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கொம்பனியானது எந்த ஒரு நிலைமையின் கீழும் மூன்று கலன்டர் மாதத்தினுள் நிகழ்வு பற்றி கொம்பனிக்கு அறியத்தராவிட்டால் கொம்பனியானது எந்த ஒரு விபத்து தொடர்பாகவும் எந்த ஒரு பெறுப்புடமையையும் ஏற்கமாட்டாது. எனினும் மரணம் நடைபெறுமாயின் அது தொடர்பான அறிவித்தல் உடனடியாக அளிக்கப்பட வேண்டும்.

கொம்பனியால் கோரப்படும் சான்றிதழ்கள், தகவல்கள் மற்றும் தேவையான சான்றுகள் யாவும் காப்புறுதிதாரரின் சொந்த செலவில் அல்லது இதன் கீழ் யாராவது கோருபவரின் மற்றும் கொம்பனியானது கோரும் வகையிலும் தரத்திலும் அமைய வேண்டும்.

கொம்பனியின் யாதாயினும் பிரதிநிதி அல்லது மருத்துவ அதிகாரி, காப்புறுதி செய்த நபரை / நபர்களை பார்க்கவோ பரிசோதிக்கவோ முடியுமான எல்லா நியாயமான நேரங்களிலும் கொம்பனி விரும்பும் முறையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

காப்புறுதி செய்த நபரின் / நபர்களின் மரணம் சம்பவிக்கும் போது கொம்பனியானது மரண பரிசோதனை ஒன்றை அதன் சொந்தச் செலவில் நடாத்தும் உரிமையைப் பெறுகின்றது.காப்புறுதி செய்தவர் தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரியொருவரின் கீழ் சிகிச்சை பெற்றில்லாதிருப்பாராயின் எந்த ஒரு நட்டஈடும் வழங்கப்பட முடியாது.

இந்தக் காப்புறுதியின் பெறுனர் எவரும் மரணம் தவிர்ந்த வேறு எது தொடர்பாகவும் நட்டஈட்டைப் பெற உரித்துடையவர் அல்லர்.

6. **உரிமை மாற்ற முடியாமை**

இந்தக் காப்புறுதித்திட்டமானது உரிமை மாற்றிக் கொடுக்க முடியாத தொன்றாகும். கொம்பனியானது இந்தக் காப்புறுதி தொடர்பாக யாதாயினும் நம்பிக்கையாளர் மாற்றத்தை ஏற்கவோ அல்லது உரிமை மாற்றம் வழங்கவோ கடனைத் திருப்பும்வரை உடமையை வைத்திருக்கும் உரிமையை இழக்கவோ மாட்டாது. இந்தக் காப்புறுதி பத்திரத்தின் கீழ் யாதாயினும் மூலதனத் தொகை தொடர்பாக அல்ல:து இழப்பீடு தொடர்பாக காப்புறுதி செய்தவர் அல்லது அவரது/அவளது சட்டரீதியான பிரதிநிதி கொம்பனிக்கு வழங்கும் பற்றுச்சீட்டு அல்லது பொறுப்பை நிறைவேற்றுதல் யாதாயினும் மற்றும் எல்லாக் காயங்கள் அல்லது எதிர்பாராத நிகழ்வுகள் தொடர்பாகவும் (மரணம் உட்பட) மேற்படி விபத்தின் விளைவினால் ஏற்பட்டதாயின் அது மேற்படி பற்றுச் சீட்டை அல்லது பொறுப்பை ஏற்ற நாளின் முன்னர் அல்லது பின்னர் இருந்தாயினும் குறித்த விபத்து கொம்பனியின் எல்லா உரிமைகளினதும் இறுதியானதும் பூரணமானதுமானதுமாகும் ஆகும்.

Ceylinco General Insurance Limited

7. **இரத்துச் செய்தல்**

கொம்பனியானது காப்புறுதி செய்தவருக்கு காப்புறுதியை இரத்துச் செய்தல் தொடர்பான அதனது விருப்பம் பற்றி 7 நாள் முன்னறிவித்தலுடன் எழுத்து மூலமாக பதிவுத் தபாலில் அவரது/அவளது கடைசியாக அறிய வந்த விலாசத்திற்கு காப்புறுதி அமுலில் இருந்த காலத்திற்கு விகித சமனான காப்புறுதியின் கட்டுப்பணத்தின் தொகையை வற்புறுத்தி கோரும் அடிப்படையில் திருப்பிச் செலுத்தி அறிவிக்கும். அதனை ஒத்த அறிவித்தல் மூலம் காப்புறுதி செய்தவர் கொம்பனிக்கு எந்த ஒரு சமயத்திலும் காப்புறுதியை இரத்துச் செய்ய முடியும். அவ்வாறாயின் கொம்பனியானது காப்புறுதி அமுலில் இருந்த காலத்திற்கான வழமையான குறுங்கால கட்டுப்பணத்தை பிடித்து வைத்துக் கொள்ளும்.

8. **சட்ட நடவடிக்கைகள்**

இந்த காப்புறுதிப் பத்திரத்தின் தேவைகளுக்கு ஏற்ப நட்டம் பற்றிய எழுத்து மூலமான நிறுவல் அளிக்கப்பட்டு 60 நாட்கள் முடிவடையும் முன்னராக எந்த விதமான சட்டரீதியான அல்லது நியாயமான நடவடிக்கைகளையும் காப்புறுதி பத்திரத்தை மீளப் பெறல் தொடர்பாக எடுக்க முடியாது. எழுத்து மூலமான ஒப்புதல் அளிக்கத் தேவைப்படும் காலத்திலிருந்து ஒரு வருடகாலம் முடிவடைந்த பின்னர் அவ்வாறான எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்க முடியாது.

9. **நடுத்தீர்ப்பு**

காப்புறுதி பத்திரம் தொடர்பாக எழக்கூடிய எல்லாக் கருத்து வேறுபாடுகள் தொடர்பாகவும் கருத்து வேற்றுமைப்பட்ட தரத்தவர் மற்றைய தரத்தவரால் எழுத்து மூலமாக அவ்வாறு செய்யுமாறு கோரிக்கை விடுத்ததன் பின்னர் எழுத்து மூலமாக நியமிக்கும் நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்குச் சமர்ப்பித்து, அல்லது அவர்களினால் தனியொரு நடுத்தீர்ப்பாளரை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் ஒரு தரத்தார் ஒருவர் வீதம், பக்கச்சார்பற்ற இருவரை எழுத்து மூலமாக, நடுத்தீர்ப்பாளர்களாக நியமித்து, ஒரு கலன்டர் மாதத்தினுள், தீர்வைப் பெற வேண்டும். யாதாயினும் ஒரு காரணத்தால் யாதாயினும் ஒரு தரத்தவர் அவ்வாறு நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு எழுத்து மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டு ஒரு கலண்டர் மாதத்தினுள் நியமிக்கத் தவறினால் அல்லது நியமிப்பதை நிராகரித்தால், மற்றைய தரத்தவருக்குத் தனியொரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்க உரிமை உள்ளது. மேலும் நடுத்தீர்ப்பாளர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தோன்றும் சந்தர்ப்பத்தில் அக் கருத்து வேறுபாடுகளை நடுத்தீர்ப்புக்குச் செல்லும் முன்னர், அவர்களுடன் உட்கார்ந்து சபைக்குத் தலைமை தாங்கக் கூடிய, அவர்களினால் எழுத்து மூலமாக நியமிக்கும் நடுவர் ஒருவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி யாதாயினும் தரத்தவரின் மரணமானது முறையே நடுத்தீர்ப்பாளர்கள் அல்லது நடுவரின் அதிகாரத்தை அல்லது பலத்தை இல்லாமற் செய்யவோ பாதிக்கவோ மாட்டாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில்(சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு) எத்தரத்தார் மரணித்தவரை நியமித்தார்களோ அத்தரத்தாரினால் இறந்தவருக்கு பதிலாக மற்றொருவரை நியமிக்க முடியும். மேற்படி பிரச்சினையை முன்வைப்பதற்கான செலவுகள் மற்றும் அன்பளிப்புக்கள் ஆகியன தீர்ப்பு வழங்கும் நடுத்தீர்ப்பாளர்கள், நடுத்தீர்ப்பாளர் அல்லது நடுவரின் விருப்பைச் சார்ந்தது. அத்தகையன இந்தக் காப்புறுதி தொடர்பான நட்டம் அல்லது சேதம் தொடர்பான கோரிக்கைகளைப் பெறுவதற்கு முன்னராகப் பெற வேண்டும் என்பது இக்காப்புறுதி ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட ஒன்றாகும். கொம்பனியானது இதன்கீழ் குறிப்பிடப்பட்ட காப்புறுதாரரது யாதாயினும் நட்டஈட்டுக் கோரிக்கையை நிராகரிக்குமாயின் மேலும் இங்குள்ள ஏற்பாடுகளின்படி நிராகரிப்பானது நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பன்னிரண்டு கலண்டர் மாதங்களினுள் நடைபெறாதிருப்பின், அத்தகைய நட்டஈட்டுக் கோரிக்கையானது எல்லா வகையிலும் செல்லுபடியற்றதாகும்.மேலும் அதனை இதன் பின்னர் எவ்வகையிலும் மீளப்பெற முடியாது

10. **காப்புறுதிக்கட்டண உத்தரவாதம்**

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையானதும் முழுமையானதும் விஷேடமானதுமான நிபந்தனையாக குறிப்பிடப்படுவது யாதெனின் பாக்கிக் காப்புறுதித் தவணைப்பணமானது புதுப்பித்தல் சான்றிதழ் பெறப்பட்டு / புறக்குறிப்பிடப்பட்டு / ஆரம்பத் தினத்திலிருந்து (60) அறுவது நாட்களுக்குள் செலுத்தப்பட்டு கொம்பனியால் பெறப்படல் வேண்டும்.

குறித்த நிபந்தனைக்கு இணங்காத சந்தர்ப்பத்தில் ஒப்பந்தமானது சுயமாகவே செயலிழக்கும் மேலும் கொம்பனியானது நட்டவச்சம் செயலிருந்த காலத்திற்கு விகித சமமான முறையிலான கட்டணத்தைப் பெற உரிமையைப் பெறுகின்றது. இந்த உத்தரவாதத்தைப் பின்பற்றி செலுத்தப்பட வேண்டிய தவணைக்கட்டணம் கொம்பனியின் அதிகாரம் பெற்ற முகவரால் பெறப்படுமாயின் கொம்பனியினால் குறித்த கொடுப்பனவு பெறப்பட்டதாகத் தீர்மானிக்கபடும். மேலும் அவ்வாறு அதிகாரம் பெறாத காப்புறுதி முகவர் உட்பட ஒரு நபரினால் கட்டணம் பெறப்பட்டது பற்றி நிரூபித்தல் முழுமையாக கொம்பனியைச் சார்ந்ததாகும். இவை மேலும் காப்புறுதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டதாகும்.

முக்கியம்

**காப்புறுதி செய்தவர் இந்த காப்புறுதிப்பத்திரத்தைக் கவனமாக வாசிக்க வேண்டும் மற்றும் யாதாயினும் தவறுகள் அல்லது பிழையான விளக்கங்கள் இங்கு காணப்படுமாயின் அல்லது காப்பீடு காப்புறுதி செய்தவரின் விருப்பங்களுக்கு இணங்கியதாக இல்லாதிருப்பின் அது பற்றி உடனடியாக கொம்பனிக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் மற்றும் காப்புறுதி பத்திரமானது கவனத்திற்காகத் திருப்பி அனுப்பப் பட வேண்டும்.**

Ceylinco General Insurance Limited